






நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர், இராசிபுரம், நாமகிரிப்பேட்டை ஆகிய பகுதிகளில் ரூ.1.28 கோடி மதிப்பிட்டில் 6 முடிவுற்ற பணிகளை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கே.பி.இராமசுவாமி, கே.பி.ஜெகநாதன், ஆர்.எம்.துரைசாமி மற்றும் கழக நிர்வாகிகள் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மாவட்டத்தில் ரூ.1.28 கோடி மதிப்பீட்டில் 6 முடிவுற்ற பணிகள்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி திறந்து வைத்தார்!

நாமக்கல்,டிச. 4 -

நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், மதியம்பட்டி ஊராட்சி, செளரிபாளையம், இராசிபுரம் ஊராட்சி ஒன்றியம், முத்துக்களிப்பட்டி ஊராட்சி, 85 ஆர். குமாரபாளையம் ஊராட்சி, சந்திரசேகரபுரம் ஊராட்சி, அக்ராஹாரம் மற்றும் நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கார்கூடல்பட்டி ஊராட்சி, ராஜபாளையம் ஆகிய பகுதிகளில் ரூ.1.28 கோடி மதிப்பீட்டில் 6 முடிவுற்ற பணிகள் துவக்க விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார்.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், மதியம்பட்டி ஊராட்சி, செளரிபாளையத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2021-2022ன் கீழ், ரூ.11.77 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நியாயவிலைக்கடை, இராசிபுரம் ஊராட்சி ஒன்றியம், முத்துக்களிப்பட்டி ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II 2021-22ன் கீழ், ரூ.12.61 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள மையக் கட்டிடம், சந்திரசேகரபுரம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II 2021-22ன் கீழ், ரூ.12.61 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டிடம், 85.ஆர். கொமாரபாளையம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் 2022-2023ன் கீழ் ரூ.9.60 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள தொழிற்கூட கட்டிடம், 85.ஆர்.கொமாரபாளையம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II 2022-2023ன் கீழ், ரூ.10.91 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள வேளாண் விளைப் பொருள் வைப்பு கட்டிடம், மகளிர் சுய உதவிக்குழு கட்டடம்: நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கார்கூடல்பட்டி ஊராட்சி, ராஜபாளையத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், ரூ.70.25 லட்சம் மதிப்பீட்டில் 2,580 ச.அடி பரப்பளவில் புதியதாக கட்டப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக்குழு கட்டடம் உள்ளிட்டவற்றை இராஜேஸ்குமார் எம்.பி திறந்து வைத்தார். முன்னதாக வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், மதியம்பட்டி ஊராட்சியில் கூட்டுறவுத் துறையின் சார்பில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை பல் சேவை மையங்களாக மாற்றும் திட்டத்தின் கீழ், ரூ.36.20 லட்சம் மதிப்பீட்டில் போக்குவரத்து வாகனத்தினை இராஜேஸ்குமார் எம்.பி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி யில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கே.பி.இராமசுவாமி, கே.பி.ஜெகநாதன், ஆர். எம்.துரைசாமி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஏ. ஆர்.துரைசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் க.பா.அருளரசு, மாவட்ட வழங்கல் அலுவலர் த.முத்துராமலிங்கம், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

